# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No. 187/2019 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 07 ( PW– 07 ) |
| **பெயர்** | :– | செல்வ கணபதி |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | பழனிசாமி |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் கரட்டூரில் வசிக்கிறேன். நான் தனியார் தொழிற்சாலையில் வேலை செய்கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியும். காவேரி cross பகுதியில் உள்ள இந்துஸ்தான் தாபா என்ற உணவகத்தில் சாப்பிட சென்றபோது பார்த்தேன். 19.12.2017-ஆம் தேதியன்று மதியம் 01.30 மணியளவில் பார்த்தேன்.

நானும் எனது நண்பர் வினோத்குமாரும் மேற்சொன்ன கடைக்கு உணவு அருந்த சென்றோம். சமையல் அறைக்கு எதிரில் இருந்த குடிலில் அமர்ந்து சாப்பிட்டு கொண்டிருந்தோம். கருப்பு நிறத்தில் பெரிய Car ஒன்று வந்து நின்றது. அதில் இருந்து இறங்கி சுமார் 06 அல்லது 07 நபர்கள் அந்த கடைக்குள் வேகமாகவும் பதற்றம் ஏற்படுத்தும்படியும் நுழைந்தனர். சமையல் அறைக்கு அருகில் இருந்த குடிலில் மூவர் இருந்தனர். அதில் ஒருவர் வெளியே சென்றார். மற்ற இருவரில் ஒருவர் அந்த குடிலில் இருந்து கத்திக்கொண்டே வெளியே ஓடி வந்தார். சமையல் செய்யும் அறையின் வாசலிலேயே அவரை சரமாரியாக வெட்டிவிட்டனர். தற்போது நீதிமன்றத்தில் உள்ளவர்கள்தான் வெட்டினார்கள். ஒருவருக்கு தலையிலும் கையிலும் வெட்டு காயம் இருந்தது. அந்த நபரிடம் என்ன ஏது என்று நான் கேட்டேன். அந்த நபர் வெட்டுப்பட்டு விழுந்த நபருக்கும் ராமன்நகரை சேர்ந்த ஸ்டாலின் என்பவருக்கு முன்விரோதம் இருந்ததாக சொன்னார். மேலும் அவர்தான் கூலிபடையை வைத்து வெட்டிவிட்டதாக சொன்னார். என்னிடம் அந்த தகவலை சொன்னவர் பெயர் முரளி. வெட்டுப்பட்டவர் பெயர் அமிர்தராஸ் என்று முரளி தான் சொன்னார்.

வெட்டியவர்கள் மீண்டும் Car-ல் ஏறி பவானி நோக்கி சென்றனர். வெட்டியவர்களின் பெயர் விவரம் எனக்குத் தெரியாது. நீதிமன்றத்தில் தோன்றியுள்ளவர்களை அந்த இடத்தில் பார்த்தேன். அதனால் சொல்கிறேன்.

அவசர ஊர்தி வந்து வெட்டுப்பட்டு கிடந்தவரை ஏற்றிச் சென்றனர். நான் அங்கு இருந்து புறப்பட்டு சென்றேன். வினோத்குமாரும் என்னுடனே புறப்பட்டு வந்தார். நான் அந்த இடத்தில் இருந்தபோது காவல் துறையினர் அந்த இடத்திற்கு வந்தனர். சம்பவம் எப்படி நடந்தது? எப்போது நடந்தது? யார் வந்தது? எதில் வந்தனர்? என்று காவல் துறையினர் கேட்டனர். நான் நடந்ததை சொன்னேன். காவல் துறையினர் என்னை விசாரித்தபோது நேரம் சுமார் 2.15 மணி இருக்கும்.

அன்றிலிருந்து சுமார் 10 நாட்கள் கழித்து சிறைச்சாலைக்கு வருமாறு சொன்னார்கள். சிறைச்சாலை உள்ளே வைத்து சம்பவத்தில் ஈடுப்பட்டவர் -கள் யார் என்று காட்டச் சொன்னார்கள். நான் காட்டினேன். ஒருவர் என்னை அழைத்துச் சென்றார் அவர் பதவி நிலை என்ன என்று எனக்குத் தெரியவில்லை. அவர் என்ன ஆடை அணிந்திருந்தார் என்று எனக்கு நினைவில்லை. நான் சுமார் 04 அல்லது 05 நபர்களை அடையாளம் காட்டினேன். 01- ஆம் எதிரி, 04-ஆம் எதிரி, 07-ஆம் எதிரி ஆகியோரை நீதிமன்றத்தில் சான்றாளர் அடையாளம் காட்டினார். அங்கிருந்து நான் சென்றுவிட்டேன். சிறைச்சாலையிலேயே அங்கு இருந்தவர்களை முகமூடி அணிவித்தும் முகமூடி அணிவிக்காமலும் பல்வேறு கோணங்களில் நிறுத்தி விசாரித்தனர். மீண்டும் மீண்டும் அவர்களையேதான் காட்டினேன். அதன் பிறகு என்னை அங்கிருந்து அனுப்பிவிட்டனர்.

என்னை மேட்டூர் நீதிமன்றத்திற்கு வரச் சொன்னார்கள். அங்கேயும் நான் நடந்ததை சொன்னேன். நீதித்துறை நடுவர்முன் சான்றாளர் கொடுத்த வாக்குமூலம் **அ.சா.ஆ–04** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**01–ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் ITI படித்திருக்கிறேன். எனது அம்மா பெயர் சுமதி. அண்ணன் ஸ்ரீதர் என்றால் சரிதான். வெங்கடாசலம் என்ற பெயரில் எனக்கு உறவினர் யாரும் இல்லை.

சம்பவம் நடந்த நேரத்தில் இருந்து சுமார் ½ மணி நேரத்தில் மேட்டூர் காவல் நிலையத்தினர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டனரா என்றால் வந்துவிட்டனர். அன்று என்னை விசாரித்த பிறகு சிறைச்சாலைக்கு சென்றதையும் நீதிமன்றத்திற்கு சென்றதையும் இல்லாமல் வேறு எப்போதும் என்னை மேட்டூர் காவல் நிலையத்தினர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் காவல் துறையினர் என்னை விசாரித்தபோதும் சொன்னேன் என்றால் சரிதான்.

காவல் துறையினர் என்னை விசாரித்தபோது நானும் எனது நண்பர் வினோத்குமாரும் இந்துஸ்தான் தாபாவில் சமையல் செய்யும் இடத்திற்கு எதிரில் இருந்த குடிலில் அமர்ந்து சாப்பிட்டதாக சொன்னேன் என்றால் சரிதான். சமையல் அறைக்கு பின்புறம் இருந்த குடிலில் மூவர் இருந்தனர் என்றும் ஒருவர் வெளியே வந்தார் என்றும் புலனாய்வில் சொன்ன வாக்குமூலத்தில் சொன்னேன்.

நான் வசிக்கும் வீட்டில் இருந்து இந்துஸ்தான் தாபா 40 கி.மீட்டர் தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். வெட்டுப்பட்டு இறந்துபோன நபரை பற்றி எனக்கு இன்றுவரை நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். வெட்டுப்பட்டவர் குறித்து முரளிதான் என்னிடம் சொன்னார் என்று புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கும் வினோத்குமாருக்கும் முரளியை ஏற்கனவே தெரியாது. வழக்குச் சம்பவம் எப்பளவு நேரத்திற்குள் நடந்து முடிந்தது என்றால் சுமார் 10 நிமிடங்களுக்குள் இருக்கும். சம்பவத்தை நான் எங்கிருந்து பார்த்தேன் என்றால் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 10 அடி தூரத்தில் பார்த்தேன். சம்பவத்தை செய்ய வந்தவர்களில் அடையாளங்கள், தோற்றம், உடை குறித்து காவல் துறையினர் என்னிடம் கேட்டனர். நான் அவர்களிடம் அந்த விவரங்களை சொன்னேன். அவர்கள் வந்த வாகனத்தில் பதிவு எண் எனக்குத் தெரியவில்லை. அந்த வாகனத்தின் Company பெயர் எனக்குத் தெரியவில்லை. வெட்டுப்பட்டவர், வெட்டுப்பட்டு இறந்து -போனவர் தவிர மற்றவர்கள் அந்த வாகனத்தில் ஏறி பவானி நோக்கி சென்றனரா என்றால் வெட்டியவர்கள் அந்த வாகனத்தில் ஏறி பவானி நோக்கி சென்றனர். முரளி என்பவரிடம் காவல் துறையினர் வருவதற்கு முன்பே நான் என்ன என்று கேட்டு அவர் விளக்கம் சொல்லிவிட்டார் என்றால் சரிதான். தாபாவின் முதன்மை நுழைவு வாயில் வடக்கு பக்கம் உள்ளதா என்றால் வலது பக்கம் உள்ளது. சமையல் அறை நான் இருந்த இடத்திற்கு பின்புறம் இருந்தது. நான் சொல்லும் குடில் என்பது மற்றவர் பார்வையில் படாமல் தனியாக அமர்ந்து சாப்பிடும் இடம் என்றால் சரிதான். சம்பவத்தில் ஈடுப்பட்டவர் எத்தனை நபர்கள் என்று எனக்கு குறிப்பாக

தெரியாது என்றால் 08 நபர்கள் இருப்பார்கள். வழக்குச் சம்பவத்தில் ஈடுப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட விவரத்தை தொலைக்காட்சி மூலம் செய்தி தாள் மூலமும் தெரிந்துக் கொண்டேன் என்றால் சரிதான்.

வந்த நபர்கள் முகமூடி அணிந்துகொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். Car-ல் இருந்து இறங்கும்போது தான் முகமூடி போட்டார்கள். மீண்டும் Car-ல் ஏறிய போது முகமூடி கழிட்டிவிட்டனர். மேற்சொன்ன சங்கதியை காவல் துறையினர் என்னை விசாரித்தபோது நான் சொன்னேனா என்றால் சொன்னேன். இன்றுவரை எதிரிகளின் பெயர் விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் ஸ்டாலினின் பெயரை மட்டும் முரளி சொன்னார். ஸ்டாலின்க்கும் இறந்துபோன நபருக்கு என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது. இறந்தவரின் இறுதி சடங்குக்கு நான் செல்லவில்லை. காவல் துறையினர் என்னை சிறைச்சாலைக்கு அடையாளம் காட்ட அழைத்துச் சென்றனர் என்றால் ஆமாம். செய்தி தாளிலும் தொலைக் -காட்சியிலும் கைதுசெய்யப்பட்ட நபர்களின் அடையாளங்களை தெரிந்துகொண்டு தான் நான் அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான்.

புலனாய்வின்போது நான் சொன்ன சங்கதிகளைதான் மேட்டூர் நீதிமன்றத்திலும் சொன்னேன் என்றால் சரிதான்.

இறந்துபோன அமிர்தராஜ் எனக்கு மாமா உறவுமுறை என்றால் இல்லை. வினோத்குமார் எனக்கு நெருங்கிய உறவினர் என்றும் அமிர்தராஜிக்கும் நெருங்கிய உறவினர் என்றும் சொன்னார் சரியல்ல. வினோத்குமார் எனக்கு நெருங்கிய நண்பர். நான் வினோத்குமார் எனக்கு நண்பர் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அமிர்தராஜ்

இறந்தபிறகு உறவினர் என்ற முறையில் தகவல் கிடைத்துதான் அமிர்தராஜின் சகோதரர் பார்த்திபராஜ் சம்பவ இடத்திற்கு வந்த பிறகு நான் வந்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் என் நண்பர் வினோத்குமாருடன் சம்பவ இடத்தில் இல்லை என்றும் நான் எதையும் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொன்னபடி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் நான் எதையும் பார்க்கவில்லை என்றும் இறந்துபோன அமிர்தராஜ் என் உறவினர் என்பதால் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**03–ஆம், 04–ஆம், 05–ஆம், 07–ஆம், 08–ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

01-ஆம் எதிரி குறுக்கு விசாரணை அப்படியே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.